# 48. உலகவாழ்வு

வஞ்சிவிருத்தம்

**உலக வாழ்வை யுறுதியென்**
**றலையு மூடர கமெலாம்**
**கலக மேசெய் கருவியார்**
**வலைவி டாது வளையுமே.**

உலக வாழ்வை உறுதி என்று
அலையும் மூடர் அகம் எலாம்
கலகமே செய் கருவியார்
வலைவிடாது வளையுமே.

இவ்வுலக வாழ்வை உறுதியானது என்று நம்பி, எப்போதும் அலைந்து திரியும் மூடருடைய மனமெல்லாம், கலகம் செய்யும் ஐம்பொறிகள் என்னும் வலைவிடாமல் வளைக்கும். 1

**சாமி நாத சண்முகா**
**காம னோபு கன்மமே**
**வாம லேசெய் வந்தெனாய்**
**நேம நேடு நெஞ்சமே.**

---

1. **கருவியார்** = ஆயுதமுடையார்

*சாமி நாத சண்முகா*
*காமன் நோபு கன்மம் ஏ*
*வாமலே செய் வந்து எனாய்*
*நேமம் நேடு நெஞ்சமே.*

நியமம் தேடும் மனமே! சாமிநாதனே! சண்முகா! நீ வந்து மன்மதன் வருத்தும் செயலை என்மேல் ஏவாமல் செய் என்பாயாக. 2

**பூசி வாவி பூதிநீ**
**றாசி லாத மேனிமேன்**
**மாசில் பூதி மல்குவாய்**
**நேச மான நெஞ்சமே.**

*பூசி வா விபூதி நீறு*
*ஆசி லாத மேனிமேல்*
*மாசு இல் பூதி மல்குவாய்*
*நேசம் ஆன நெஞ்சமே.*

அன்பான மனமே! குற்றமில்லாத உடம்பின்மீது நாள்தோறும் திருநீற்றைப் பூசி வருவாயாக! அவ்வாறு செய்து வந்தால் குற்றமில்லாத செல்வத்தை மிகுதியாக அடைவாய். 3

**காறு கெட்ட கந்தனால்**
**ஊற றுக்க வுள்ளநீ**
**வேறெ ழுத்தை வெஃகுறேல்**
**ஆறெ ழுத்தை யன்றியே.**

*காறு கெட்ட கந்தனால்*
*ஊறு அறுக்க உள்ள நீ*
*வேறு எழுத்தை வெஃகுறேல்*
*ஆறு எழுத்தை அன்றியே.*

அளவில்லாத கந்தன் அருளால் உன் துன்பத்தை ஒழிக்கவுள்ள நீ திருவாறெழுத்தையன்றி வேறு எழுத்தை விரும்பாதே. 4

**சாம மோது மாசதா**
**வீமன் மைந்தன் மேனியாம்**
**ஓமு மெம்பி ரானினோ**
**ரேம மந்த்ர மேயரோ.**

*சாமம் ஓது மா சதா*
*வீமன் மைந்தன் மேனி ஆம்*
*ஓமும் எம்பிரானின் ஓர்*
*ஏம மந்த்ரமே அரோ.*

சாம வேதம் கூறும் சதாசிவப் பெருமான் மகனான எமது கடவுள் குகேசனுடைய திருமேனியாகும் ஓங்காரமும் இனிய மந்திரமாகும். 5

**இறைமு னிட்டு ணாதவூண்**
**கறையை யொக்கு மேகலாம்**
**உறவ றுத்த வூனிடேல்**
**வெறிதில் சுத்தன் வேலனே.**

*இறைமுன் இட்டு உணாத ஊண்*
*கறையை ஒக்குமே கலாம்*
*உற அறுத்த ஊன் இடேல்*
*வெறிதுஇல் சுத்தன் வேலனே.*

இறைவன் முன்னே படைத்து உண்ணப்படாத உணவு நஞ்சை ஒக்கும். அறிவுடைய தூயன் வேலன் அவனுக்குக் கொடுமையாக உயிரைக் கொன்ற மாமிசத்தை நைவேத்தியம் என்று படைக்காதீர். 6

**நிலவு மேனி நிருமலப்**
**புலவ னெந்தை பொருவில்கால்**
**மலரை நாளும் வழிபடின்**
**விலகு மெந்த வினையுமே.**

*நிலவு மேனி நிருமலப்*
*புலவன் எந்தை பொருவு இல் கால்*
*மலரை நாளும் வழிபடின்*
*விலகும் எந்த வினையுமே.*

ஒளிபொருந்திய திருமேனியுடைய குற்றமில்லாத புலவனாகிய எம்தந்தை முருகவேளின் ஒப்பற்ற திருவடி மலரை நாள்தோறும் வணங்கினால், எந்த வினையும் விலகிவிடும்! 7

6. **கலாம்** = கொடுமை; **சூ – நிகண்டு** காண்க.

**வடிவு மைந்த னடிமலர்**
**வடிவு கண்டு மகிழ்பவர்**
**வடிவு கொண்ட மடவரல்**
**வடிவை வண்டு புகல்வரே.**

வடிவு மைந்தன் அடி மலர்
வடிவு கண்டு மகிழ்பவர்
வடிவு கொண்ட மடவரல்
வடிவை வண்டு புகழ்வரே.

அழகுடைய மகன் முருகனின் திருவடி மலரின் அழகு கண்டு மகிழ்பவர் அழகுடைய பெண்களின் அழகைக் குறைவுடையதெனக் கூறுவர்! 8

**ஆதி யந்த மற்றசேய்**
**சீதம் விஞ்சு சேவடிப்**
**போது கண்ட போதையர்க்**
**கேத னந்தை யிச்சையே.**

ஆதி அந்தம் அற்ற சேய்
சீதம் விஞ்ச சேவடிப்
போது கண்ட போதையர்க்கு
ஏது அனந்தை இச்சையே.

முதலும் முடிவும் இல்லாத சேயின் குளிர்ச்சியை வெல்லும் சிவந்த திருவடி மலரைத் தரிசித்த அறிஞர்க்கு உலகப்பற்று ஏது? 9

**இச்சை நோய ரெத்துணைப்**
**பச்சை மாழை பார்க்கினும்**
**துச்ச வாசை சோர்வரோ**
**உச்சு வாச வுள்ளமே.**

இச்சை நோயர் எத்துணைப்
பச்சை மாழை பார்க்கினும்
துச்ச ஆசை சோர்வரோ
உச்சுவாச உள்ளமே.

உள்ளே மூச்சுக்காற்றை இழுக்கும் மனமே! ஆசை என்னும் நோய் பிடித்தவர்கள் எவ்வளவு பசும்பொன் பெற்றாலும், அற்ப ஆசையில் சோர்வடைய மாட்டார்கள்! 10

**வரையி லும்பை வண்டறை**
**சுரம டர்ந்த துறையிலும்**
**விரத நோற்க வேண்டுமோ**
**சரண டைந்த தாசரே.**

*வரையிலும் பை வண்டு அறை*
*சுரம் அடர்ந்த துறையிலும்*
*விரதம் நோற்க வேண்டுமோ*
*சரண் அடைந்த தாசரே.*

உன்னைச் சரணடைந்த அடியார் மலையிலும் அழகிய வண்டுகள் ஒலிக்கும் காடுகள் செறிந்த இடங்களிலும் தவம் செய்ய வேண்டுமோ? 11

**நிட்டை கூடி நிறுவினும்**
**சட்டி நாதர் தயவிலார்**
**ஒட்டி வாழு முரனுறார்**
**விட்டி டாது விடுதியே.**

*நிட்டை கூடி நிறுவினும்*
*சட்டி நாதர் தயவு இலார்*
*ஒட்டி வாழும் உரன் உறார்*
*விட்டிடாது விடுதியே.*

உடம்பின்மீது பற்று வைத்துக்கொண்டு நிட்டையைச் செய்தாலும், சஷ்டித் தலைவரான கந்தவேளின் அருள் இல்லாதவர், அத்துவிதமாக வாழுதற்குரிய ஞானத்தைப் பெறமாட்டார்; விடுதலை கிட்டாது. 12

**முத்த னான முருகனைப்**
**பத்தி யோடு பணிகுநர்**
**செத்தி லாத தெளிவிலே**
**நித்தம் வாழ்வர் நிலவியே.**

*முத்தன் ஆன முருகனைப்*
*பத்தியோடு பணிகுநர்*
*செத்திலாத தெளிவிலே*
*நித்தம் வாழ்வர் நிலவியே.*

முத்தியாக விளங்கும் முருகப்பெருமானைப் பத்தியுடன் வணங்குவோர் மரணமிலா ஞானத்துடன் இவ்வுலகில் நித்தியமாக வாழ்வார்கள். 13

**அருணை நாத னறிவினால்**
**மருவு தேவ மணியருள்**
**முருக வேளை முழுவதும்**
**கருதும் யோகு கமழுமே.**

அருணை நாதன் அறிவினால்
மருவு தேவ மணி அருள்
முருக வேளை முழுவதும்
கருதும் யோகு கமழுமே.

அருணகிரிநாதரின் ஞானத்தால் கூடும் சிவபெருமான் அருள், முருகவேளை முழுவதும் நினைக்க யோக மணம் வீசும். 14